முக்கிய வார்த்தைகள்:
*சீராஹ்*
*போதனைகள்*
*வழிகாட்டுதல்*
*பண்பு*

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**09 ஜனவரி 2026 / 19 ரஜப் ஹிஜ்ரி 1447**

# ”சீராஹ்” எனும் வரலாற்றை அறிந்து கொள்வதன் அவசியம்

ٱلْحَمْدُ لِلَّهِ ٱلَّذِي خَلَقَ فَسَوَّى، وَقَدَّرَ فَهَدَى، وَأَسْعَدَ وَأَشْقَى، وَأَضَلَّ بِحِكْمَتِهِ وَهَدَى. أَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا ٱللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ ٱلْعَلِيُّ ٱلْأَعْلَى، وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ ٱلنَّبِيُّ ٱلْمُصْطَفَى، وَٱلرَّسُولُ ٱلْمُجْتَبَى، وَعَلَى آلِهِ وَصَحْبِهِ وَمَنِ اهْتَدَى. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللَّهِ، اتَّقُوا اللَّهَ حَقَّ تُقَاتِهِ، وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ.

**ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [முஃமின்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]**

”தக்வா” அதாவது, இறை உணர்வை நமது உள்ளங்களில் வளர்த்துக் கொள்வோமாக! நமது சிந்தனைகள், எண்ணங்கள், வார்த்தைகள், செயல்கள் மற்றும் எதிர்வினைகள் ஆகிய அனைத்திலும் இந்த ”தக்வா” பிரதிபலிக் கட்டுமாக! இறைத்தூதர்[ஸல்] அவர்களின் **சீராஹ்** எனும் சிறந்த வரலாற்றையும், **சுன்னாஹ்** எனும் வழிமுறையையும் தொடர்ந்து அறிந்து கொள்வதற்கு நமது நேரத்தை அர்ப்பணிப்போமாக! காரணம், அவற்றில் மனிதகுலம் அனைவருக்கும், அனைத்து காலத்துக்கும் பொருந்தக்கூடிய பாடங்களும் வழிகாட்டுதல்களும் காணப்படுகின்றன.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

நாம் யாரை ஒருபோதும் சந்தித்திருக்கவில்லையோ அவருக்காக, அவரைத் தேடி நாம் ஏங்குவோமா? நம்மைப் பார்த்திராத ஒருவர், நமக்காக, நம்மைத் தேடி ஆழமாக ஏங்குவதற்கு சாத்தியமுள்ளதா?

அன்பிற்குரிய எனது சகோதரர்களே! இக்கேள்விக்கானப் பதில் "ஆம்" என்பதாகும். அவர்கள் தான், நமது பாசத்திற்குரிய இறைத்தூதர் முஹம்மது[ஸல்] ஆவார்கள். பிற்கால தலைமுறையினரில் ஓரிறை நம்பிக்கையாளர்களாக உள்ள நம்மை நினைத்து, நம்மைப் பார்க்க வேண்டுமென இறைத்தூதர்[ஸல்] அவர்கள் ஏங்கியுள்ளார்கள். ஒருமுறை, இறைத்தூதர்[ஸல்] அவர்கள் தனது தோழர்களிடம் கூறினார்கள்:

وَدِدْتُ أَنِّي قَدْ رَأَيْتُ إِخْوَانَنَا

பொருள்: எனது சகோதரர்களைப் பார்க்க வேண்டுமென நான் விரும்புகிறேன்; அப்போது தோழர்களாகிய ஸஹாபாக்கள்: இறைத்தூதரே! நாங்கள் உங்களுடைய சகோதரர்கள் இல்லையா? எனக் கேட்டார்கள். அதற்கு இறைத்தூதர்[ஸல்] அவர்கள்: "நீங்கள் எனது தோழர்கள் ஆவீர்கள்; ஆனால், எனது சகோதரர்கள் இதுவரை இவ்வுலகில் உதிக்காத, என்னைச் சந்திக்காதவர்கள் ஆவார்கள்" எனக் கூறினார்கள். [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் அந்-நஸாயீ ரஹ்]

இவ்வாறுதான், இறைத்தூதர்[ஸல்] அவர்கள், தனது சமுதாய மக்களை நினைத்து ஏங்கினார்கள். எவர்களை அவர்கள் நேரடியாகச் சந்திக்கவில்லையோ, எவர்களின் உள்ளங்கள் ஓரிறை நம்பிக்கையாலும், இறைத்தூதர்[ஸல்] அவர்களின் **போதனைகள்** மீதான அன்பாலும் நிரப்பமாகக் காணப்படுகின்றனவோ அந்த சமுதாய மக்களை நினைத்து ஏங்கினார்கள்; அவர்களைப் பார்க்க விரும்பினார்கள். அதாவது, நம்மைப் பார்க்க விரும்பினார்கள்.

**அன்பிற்குரிய சகோதரர்களே!**

இறைத்தூதர்[ஸல்] அவர்கள், நமது ஆசிரியராகவும் வழிகாட்டியாகவும் இருக்கின்றார்கள். அவர்கள் தனது வழிகாட்டுதலின் மூலம் உள்ளங்களைப் பரிசுத்தமாக்குகின்றார்கள்; திருக்குர்ஆனின் போதனைகளால் ஆன்மாக் களைப் பிரகாசிக்கச் செய்கின்றார்கள்; ஓரிறை நம்பிக்கை மற்றும் அறிவு ஞானத்தின் வழியைக் காண்பிக்கின்றார்கள்.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "ஆலி-இம்ரான்" எனும் அத்தியாயத்தின் 164-வது வசனத்தில் கூறுகிறான்:

لَقَدْ مَنَّ ٱللَّهُ عَلَى ٱلْمُؤْمِنِينَ إِذْ بَعَثَ فِيهِمْ رَسُولًا مِّنْ أَنفُسِهِمْ
يَتْلُوا۟ عَلَيْهِمْ ءَايَـٰتِهِۦ وَيُزَكِّيهِمْ وَيُعَلِّمُهُمُ ٱلْكِتَـٰبَ وَٱلْحِكْمَةَ
وَإِن كَانُوا۟ مِن قَبْلُ لَفِى ضَلَـٰلٍ مُّبِينٍ ١٦٤

பொருள்: "நிச்சயமாக அல்லாஹ் [ஓரிறை நம்பிக்கையாளர்களாகிய] மு·மின்களுக்கு அருள் புரிந்திருக்கின்றான்; அவன் அவர்களுக்கு அவர்களிலிருந்தே ஒரு தூதரை அனுப்பி வைத்தான்; அவர், அவனுடைய [இறைவனுடைய] வசனங்களை அவர்களுக்கு **ஓதிக் காண்பிக்கிறார்**; இன்னும் அவர்களைப் [பாவத்தை விட்டும்] பரிசுத்தமாக்குகிறார்; மேலும் அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுக்கின்றார் - அவர்களோ இதற்கு முன் நிச்சயமாக பகிரங்கமான வழிகேட்டிலேயே இருந்தார்கள்"

எனவே, நாம் உண்மையாகவே இறைத்தூதர்[ஸல்] அவர்களை நேசிக்கின்றோமா? அவர்களின் வாழ்க்கைப் பயணமாக உள்ள **"சீராஹ்"** என்பதைப் படித்துள்ளோமா? அவர்களின் போதனைகளையும் **"சுன்னாஹ்"** எனும் வழிமுறையையும் ஆர்வத்துடன் பின்பற்றுகிறோமா? என நம்மை நாம் கேட்டுக் கொள்வோமாக.

அன்பிற்குரிய சகோதரர்களே! புனிதமிக்க இந்த ரஜப் மாதமாகிறது, இறைத்தூதர்[ஸல்] அவர்களின் **சீராஹ்** எனும் வாழ்க்கை வரலாற்றில் காணப்படும் பல முக்கியமான நிகழ்ச்சிகளை உள்ளடக்கியுள்ளது. அவற்றில் பல பாடங்கள் காணப்படுகின்றன. அவற்றில் ஒன்று, இறைத்தூதர்[ஸல்] அவர்கள் விண்ணுலகத்திலும் பூமியிலும் செய்த பயணத்தைப் பற்றிக் கூறுகின்ற இஸ்றா, மிஃராஜ் எனும் நிகழ்ச்சியாகும்.

எதிர் வரும் ரமதான் மாதத்துக்காக தயார் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் நாம் இருக்கின்றோம்; அதற்காக நமது ஆன்மீக ஆற்றலை வளர்த்து வருகிறோம்; இந்நிலையில், இன்றைய "குத்பா" பிரசங்கமாகிறது, பல முக்கியப் பலன்களை உள்ளடக்கியுள்ள **"சீராஹ்"** எனும் இறைத்தூதர்[ஸல்] அவர்களின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து **வழிகாட்டுதல்களை** உங்களுக்கு வழங்க உள்ளது

**முதலாவதாக: இறைத்தூதர்[ஸல்] அவர்களின் "சீராஹ்" வாகிறது பரந்த பாரம்பரிமிக்க ஒரு வாழ்க்கை வரலாறு ஆகும். நாம் சிந்திக்க வேண்டுமென்றும் ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டுமென்றும் அது நம்மை ஆர்வமூட்டுகிறது.**

அல்லாஹ் மற்றும் அவனது தூதர்[ஸல்] அவர்கள் மீது நம்பிக்கைக் கொண்டதற்காக, கடுமையாகத் துன்புறுத்தப்பட்ட போதிலும் தனது ஓரிறை நம்பிக்கையில் நிலைத்து நின்ற நபித்தோழர் பிலால் பின் ரபாஹ் [ரலி] அவர்களின் வரலாறு முதல், இறைத்தூதர்[ஸல்] அவர்களுடன் கொண்டிருந்த நட்பில் உச்சகட்டமான நேர்மையுடன் காணப்பட்ட செய்யிதினா அபூபக்கர் அஸ்ஸித்தீக் [ரலி] அவர்களின் வரலாறு வரை, **சீராஹ்** வில் காணப்படும் அனைத்து வரலாறுகளிலும் ஏராளமானப் பாடங்கள் காணப்படுகின்றன.

இந்த நிகழ்ச்சிகளெல்லாம், நமது வாழ்க்கைப் பயணத்தைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டுமென நமக்கு அழைப்பு விடுக்கின்றது. சோதனைகளை நாம் எப்படி எதிர்கொள்கிறோம்? ஓரிறை நம்பிக்கையின் விஷயத்தில் பிலால் [ரலி] அவர்களிடம் காணப்பட்ட நிலைத்தன்மையின் ஒரு துளியளவாவது

நம்மிடம் காணப்படுகிறதா? அல்லது இறைத்தூதர்[ஸல்] அவர்கள் மீது செய்யிதினா அபூபக்கர் [ரலி] அவர்கள் கொண்டிருந்த அளவு கடந்த அன்பு மற்றும் நேர்மையின் ஒரு துளியளவாவது நம்மிடம் காணப்படுகிறதா? என நம்மை நாம் கேட்டுக் கொள்ள வேண்டும். நிச்சயமாக, **"சீராஹ்"** வில் காணப்படும் சிறந்த முன்மாதிரிகளின் மூலம் பலன் பெறுவதற்கு நமக்குப் பல வாய்ப்புகள் உள்ளன.

**இரண்டாவதாக: மனிதகுலம் அனைவரும் உயர்ந்த ஒழுக்கப் பண்புகளைப் பெற்றுத் திகழ்வதற்கு, "சீராஹ்" வில் மிகச் சிறந்த வழிகாட்டுதல் உள்ளது.**

ரசூலுல்லாஹி[ஸல்] அவர்களின் **பண்புகள்**, மனித சிறப்பின் உச்சகட்டமான நிலையைப் பிரதிபலிப்பவையாக இருந்தன. அவர்கள் பரிபூரணமானக் கருணைச் சிந்தனையுடன் செயல்பட்டார்கள்; மன்னிப்பதற்கு முக்கியத்துவமளித்தார்கள்; அநீதத்தை எதிர்ப்பதில் உறுதியாக நின்றார்கள்; தனது தோழர்களை அன்பு மற்றும் அக்கறையுடன் வழிநடத்தினார்கள். இவைதான், ஒரு உண்மையான தலைவரின் **பண்புகளாகும்.** நம்மில் ஒவ்வொருவரும் தலைவர்களாக இருக்கின்றோம். நமது உள்ளங்களை அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதன் பால் வழிநடத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே**!

இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நம்மை நினைத்து, நம்மைப் பார்ப்பதற்காக ஏங்கினார்களே அவ்வாறே, நாமும் அவர்கள் விஷயத்தில் ஏக்கத்துடன் காணப்பட வேண்டும். ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள் தனது "உம்மத்" [சமுதாயத்தின்] மீது உச்சகட்டமாக அன்பு கொண்டிருந்தார்கள். எனவே, நமது வாழ்க்கையில் நாம் அலுவல்மிக்கவர்களாக காணப்பட்ட போதிலும், நமக்குப் பல தனிப்பட்ட கடமைகள் இருந்த போதிலும், இறைத்தூதர்[ஸல்] அவர்களின் **சீராஹ்** எனும் வாழ்க்கை வரலாற்றை ஆய்வு செய்து தெரிந்து கொள்வதற்கும் நாம் நேரத்தை ஒதுக்க வேண்டும். அந்நிலையில். நமது வாழ்க்கை அவர்களின் முன்மாதிரி மற்றும் ஞானத்தால் **வழிகாட்டப் பட்டதாக** அமையும். இன்ஷாஅல்லாஹ்.

இவ்விஷயங்களெல்லாம், ரமதான் மாதத்துக்காக நாம் தயார் செய்து வரும் நிலையில், நமது ஆன்மீகத்தை வளர்த்துக் கொள்வதற்கு உதவியாக அமையட்டுமாக! மறுமையில் நமது பாசத்திற்குரிய இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்களுடன் இணைந்து வாழும் வாய்ப்பை நாம் பெறுவோமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنْهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا الْمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلَسْطِيْنَ وَفِيْ كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ

فَرَجًا، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ اكْتُبِ السِّلْمَ وَالسَّلاَمَ وَالأَمْنَ وَالأَمَانَ لِلْعَالَمِ كُلِّهِ وَلِلنَّاسِ أَجْمَعِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي الْقُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالْمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذْكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِنْ فَضْلِهِ يُعْطِكُمْ، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.